


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 499.85 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக 10 பயனாளிகள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 11.12.2024 அன்று புதுதில்லியில், இந்திய அளவில் 2024–ஆம் ஆண்டு உட்கட்டமைப்புகளில் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம், கீரநத்தம் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்காக வழங்கப்பட்ட முதல் பரிசுக்கான விருதினை கீரநத்தம் ஊராட்சிமன்ற தலைவர் ரா.பழனிசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுடெல்லி குடியரசு தின அணி வகுப்பு ஊர்திகள் சுழற்சி முறையில்தான் அனுமதிக்கப்படுகிறது!

# அரைவேக்காட்டுத்தனமாக பிதற்றுகிறார் எடப்பாடி பழனிசாமி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விளக்கம்!

சென்னை, டிச. 25 -

அரசியல் நடைமுறையை அறியாமல் உரக்கச் சத்த மிட்டு ஊரை ஏமாற்ற முயல்வது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனி சாமிக்கு கைவந்த கலை என்றும் புதுதில்லி குடியரசு தின அணிவகுப்பு ஊர்திகள் சுழற்சி முறையில் அனும திக்கப்படுகிறது என்றும் 2023-24ஆம் ஆண்டுகளில் பங்கேற்ற தமிழ்நாடு அர சின் ஊர்திகள் இனி 2026 ஆம் ஆண்டில்தான் பங் கேற்க முடியும் ஒன்றிய அரசின் நடைமுறை இது என்றும் இதை அறிந்து கொள்ளாமல் அரைவேக் காட்டுத்தனமாகப் பிதற்று வது அறியாமை அல்லவா என்றும் பொதுமக்கள் புரிந்துகொள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் விளக்கமளித்து அறிக்கை வெளியிட்டுள் ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

புதுடெல்லியில் வரும் 2025 ஆம் ஆண்டு நடைபெ றும் குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் அலங்கார ஊர்திக்கான அனுமதி மறுப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இன்றைய தினம் ஒரு அரை வேக்காட்டுத்தனமாகப் பிதற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அன் றாடம் நடைபெறும் அரசு நிகழ்வுகளையும் அரசிய லாக்கி, அதிலே ஆதாயம் காணத் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்.

புதுடெல்லி குடியரசு தின விழாவில் ஆண்டுதோ றும் கடமைப் பாதையில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் சார்பில் அலங்கார ஊர்தி கள் பங்கேற்பதனை ஒன் றிய அரசின் சார்பில் அதற் கென அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட குழுவின் மூலம் அந்தந்த மாநிலங்களின் சார் பாக, மாநிலங்களின் வளர்ச்சி, கலாச்சாரம், பண் பாடு ஆகியவற்றைப் பறை சாற்றுகின்ற வகையில் அலங்கார ஊர்திகளின் வடி வமைப்புகள் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அவை உயர்மட்ட குழுவினரால் உறுதி செய்யப்படுகின்றன.

இந்த நிலையில், இந்தி யாவிற்கே வழிகாட்டியா கத் திகழும் தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியை வெகு சிறப்பாக நடத்திக் கொண் டிருக்கின்ற தமிழ்நாடு முத லமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்த உடன் 2022 ஆம் ஆண்டு புதுதில்லி யில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில் சமர்ப்பிக் கப்பட்ட அலங்கார ஊர்தி வடிவமைப்பில், சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாட்டில் அரும்பாடுபட்ட தலைவர்களின் திருவுருவச் சிலைகளை குறிப்பாக, வ.உ.சிதம்பரனார் அவர் களை முன்னிலைப்படுத்திய அலங்கார ஊர்தியின் வடிவ மைப்பினை ஒன்றிய அர சால் திட்டமிட்டு பங் கேற்க அனுமதி மறுக்கப் பட்டது.

**தமிழ் நாட்டை சுற்றிவந்த அலங்கார ஊர்தி!**

ஒன்றிய அரசின் இந்த முடிவிற்கு முதலமைச்சர் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்கள். அத்து டன் அனுமதி மறுக்கப்பட் டதை மறுபரிசீலனை செய் யவேண்டும் என்றும் பிரதமர் அவர்களுக்கு கடித மும் அனுப்பினார். மேலும், ஒன்றிய அரசினால் அனு மதி மறுக்கப்பட்ட இந்த அலங்கார ஊர்திகளை முத லமைச்சர் அவர்கள் சென் னையிலே கொடியசைத்து தொடங்கி வைத்து தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் அலங் கார ஊர்திகள் சென்று இலட்சக்கணக்கான மக்கள் அதைப் பார்த்துப் பாராட் டியது வரலாறு. இதனை எதிர்க்கட்சித் தலைவர் மறந்து விட்டாரா ? பின்னர் கடந்த 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அர சின் சார்பில் அலங்கார ஊர் திகள் சிறப்பாக பங்கேற்ற தோடு, 2024ஆம் ஆண்டுக்கு சிறந்த வடிவமைப்பிற்கான மூன்றாம் பரிசினையும் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் சார் பில் நடைபெறுகின்ற குடி யரசு தின அலங்கார ஊர்தி கள் அணிவகுப்பில் அனைத்து மாநிலங்களுக்கும் வாய்ப்பு தர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந் தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் 6 மண்டலங்க ளாக பிரிக்கப்பட்டு; ஒவ் வொரு மண்டலத்திலும் உள்ள மாநிலங்களின் சார் பில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அலங்கார ஊர் திகளுக்கு வாய்ப்பளிக்கப்ப டுமேயானால், அடுத்து வரு கின்ற மூன்றாம் ஆண்டு வாய்ப்பு வழங்கிட இய லாது என்று எழுத்துப்பூர்வ மாக அனைத்து மாநிலங் களுக்கும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது என்றா லும், அந்தந்த மாநிலங் களின் சார்பில் வழங்கப்படு கின்ற சிறந்த கருப்பொருள் களுக்கு ஏற்ப வடிவமைக் கப்பட்ட அலங்கார ஊர்தி களை கடமைப்பாதையில் பங்கேற்காமல், அணிவகுப்பு நிறைவு பெற்ற பின்னர் பொதுமக்கள் பார்வைக்கு நிறுத்திக் கொள்ளலாம் என் றும் ஒன்றிய அரசு கடிதம் வாயிலாகத் தெரிவித் துள்ளது.

**விவரம் தெரியாத பழனிசாமி!**

இதுபோன்ற அரசின் நடைமுறைகளை, உள் விவ காரங்களை ஒரு முதலமைச் சராக பணியாற்றியவர் என் பதையும் மறந்துவிட்டு, ஏதோ வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என் கின்ற பெயரில், யாரோ எழுதித்தருகின்ற தகவல் களின் அடிப்படையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தவறான அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். அ.தி.மு.க ஆண்ட 10ஆண்டுகால ஆட் சிக் காலத்தில் ஏதோ தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் தமிழ் நாட்டின் சார்பிலே அலங் கார ஊர்திகள் பங்கேற்றுச் சிறப்பித்தது போன்ற ஒரு மாயையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருவாக் கியுள்ளார். அ.தி.மு.க ஆட்சி நடைபெற்ற 10 ஆண்டுகால ஆட்சியில் கடந்த 2012, 2013, 2015, 2018 ஆகிய ஆண்டுகளில் அலங்கார ஊர்திகள் பங்கேற்கவில்லை என்கின்ற விவரமே அவ ருக்கு தெரியவில்லை.

2014, 2016, 2017, 2019, 2020, 2021,ஆகிய 6 ஆண்டு கள் மட்டுமே அதுவும் தொடர்ச்சியாக இல்லா மல், அ.தி.மு.க. ஆட்சியில் அலங்கார ஊர்திகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட் டன. மேலும், அன்றைய கால கட்டங்களில் ஒன்றிய அரசு தற்போது கொண்டு வந்துள்ள விதிமுறைகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்பேரில், தமிழ் நாடு அரசின் சார்பில் கடந்த ஆண்டுகளில் மாநி லத்தின் கலாச்சாரம், பண் பாடு ஆகியவற்றைப் பறை சாற்றுகின்ற வகையில், அலங்கார ஊர்திக்கான வடி வமைப்பு மாதிரிகளை ஒன் றிய அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள உயர் மட்ட குழுவினர் பலமுறை பார்த்து வியந்து பாராட்டி யுள்ளதையும் எதிர்க்கட்சித் தலைவர் அறிந்துகொள்ள வில்லை.

**பதவிக்குரிய மரியாதையை காப்பாற்றுங்கள்!**

இனி வரும் காலங்களில் இந்தியாவுக்கும் பிற மாநி லங்களுக்கும் வழிகாட்டி யாக திகழ்கின்ற வகையில், நல்ல பல திட்டங்களை நாளும் தொடர்ந்து நடை முறைப்படுத்திக் கொண்டி ருக்கும் முதலமைச்சர் திரா விட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பற் றியும், அவர்கள் நல்லாட்சி யைப் பற்றியும் குறை கூறு வதை விட்டுவிட்டு, ஆக்கப் பூர்வமான பணிகளிலே ஈடு பட வேண்டும். எதிர்க்கட் சித் தலைவர் என்கின்ற பதவி என்பது மிகுந்த மரி யாதைக்குரியது என்பதை அவர் உணரவேண்டும். அர சுக்கு ஆக்கபூர்வமான நல்ல யோசனைகளை கருத்துக ளைக் கூறி அந்தப் பதவிக்கு ரிய மரியாதையைக் காப் பாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இதே நேரத்தில், இரண்டு ஆண்டுகள் ஒரு மாநிலத் தின் ஊர்திகள் தொடர்ந்து இடம்பெற்றால் மூன்றா வது ஆண்டில் அனுமதிக்கப் படாது என்று ஒரு நடை முறையை ஒன்றிய அரசின் ஆணை தெரிவித்துள்ளது. அந்த நடைமுறையை ஒன் றிய அரசு எல்லா மாநிலங் களுக்கும் ஒரே சீராக பின் பற்றாமல் உத்தரபிரதேசம், குஜராத், ஆகிய மாநிலங் களுக்கு தொடர்ந்து மூன் றாவது முறை அனுமதித்து விட்டு தமிழ்நாட்டிற்கு மட்டும் அனுமதி மறுப்பது நியாயமும் நேர்மையும் அற்ற; பாரபட்சமான செயல் என்பதை சுட்டிக்காட்டு கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.




புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி சார்பில் திருமயம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பாக இளைஞரணி சமூக வலைதள பயிற்சி முகாமை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் இளையராஜா, ஜி.பி.ராஜா(எ)பிரதீப்ராஜா, கழகசெய்திதொடர்புதுணைச்செயலாளர்சூர்யாகிருஷ்ணாமூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் பொன். இராமலிங்கம், அடைக்கலமணி, அ.முத்து, திரு.அறு.சிதம்பரம், ஆர்.கணேசன், வீ.ஆர். இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இளையராஜா, சே.அருண்குமார் அ.முகமது ரபீக், க.கவிக்குமார், இரா.தமிழராசு, நா.நசுருதீன் மற்றும் ஏ.விஸ்வநாதன், ரா.பழனிக்குமார், திருமயம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.சுரேந்திரன், வி.கண்ணன், கே.ஆறுமுகம், கா.சிவகுமார், மு.சினேகா, சி.அருண்குமார், அருண், பி.எல்.அரவிந்த் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில எடுப்பிலிருந்து விடுவிப்பு !

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பயனாளிகள் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**சென்னை, டிச. 25-**

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில எடுப்பிலிருந்து சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 499.85 ஏக் கர் நிலங்கள் விடுவிப்பு செய்து - நீண்ட கால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக பயனாளிகள் சந்தித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரி யத்தால் கையகப்படுத்த அறி விக்கை செய்யப்பட்ட நிலங் களில் சென்னை மாவட்டத் திற்குட்பட்ட 499.85 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சி னைக்கு நிரந்தர தீர்வு அளித் ததற்காக 10 பயனாளிகள் சந்தித்து, தங்களது மன மார்ந்த நன்றியினை தெரி வித்துக் கொண்டனர்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 4(1) Notice கொடுக்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்த உத்தேசிக் கப்பட்ட நிலங்கள் ஆகிய வற்றிற்கு நீண்ட காலமாக பொதுமக்கள் தடையின்மை சான்று கோரியும், நில எடுப் பிலிருந்து விலக்களிக்கக் கோரியும் அரசிடம் மனுக் கள் அளித்து வந்தனர். பொது மக்களின் இக்கோரிக்கை தொடர்பாக முதல்வரின் முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் தீர்வு காணும் பொருட்டு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆணையம் மூலம் நில நிர்வாக ஆணையர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து 10.10.2023 அன்று அரசாணை வெளியிடப் பட்டது.

குழுவின் கவனமான பரி சீலனைக்குப் பிறகு தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத் தால் கையகப்படுத்த அறி விக்கை செய்யப்பட்ட நிலங் களில் முதற்கட்டமாக பல் வேறு மாவட்டங்களில் 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கப்பட்டு, தங் களது நீண்ட கால பிரச்சி னைகளுக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக முதலமைச்சர் அவர்களை 4.10.2024 அன்று பயனாளிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

அதன் அடுத்த கட்டமாக சிறப்புக் குழு சென்னை மாவட்டத்தில் உள்ள சில இடங்களில் கூட்டு ஆய்வு மேற்கொண்டு அளித்த அறிக்கையின் அடிப்படை யில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத் தப்பட்ட சென்னை மாவட் டத்தைச் சேர்ந்த கொரட் டூர், கொட்டிவாக்கம், விரு கம்பாக்கம், நெசப்பாக்கம், போரூர், நெற்குன்றம், முகப் பேர், அம்பத்தூர், நொளம் பூர் ஆகிய இடங்களில் உள்ள 499.85 ஏக்கர் நிலங் கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணையிடப் பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத் தப்பட்டு, சிறப்புக் குழு பரிந் துரையின்படி நில எடுப்பிலி ருந்து விலக்களித்து ஆணை பெற்ற சென்னை மாவட்டத் தைச் சேர்ந்த 10 பயனாளி கள் முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் சந்தித்து தங் களது நீண்ட நாள் பிரச்சி னைக்கு தீர்வு கண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்ட னர்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவ சதி மற்றும் நகர்ப்புர வளர்ச் சித் துறை அமைச்சர் சு. முத் துசாமி, தலைமைச் செய லாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு மதி காகர்லா உஷா, தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முரு கன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன், ஆகியோர் உடனிருந்தனர்.

### விடுதலைப் போராட்ட வீரர் - தகைசால் தமிழர்

# இரா.நல்லகண்ணு நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – தோழமைக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை!

சென்னை, டிச. 25-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் விடுதலைப் போராட்ட வீரர், தகைசால் தமிழர், இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா, இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற் றாண்டு விழா, தோழர் கே.டி.கே. தங்கமணி 23வது நினைவு நாள் என மூன்று நிகழ்ச்சிகளை இணைத்து 26.12.2024 - வியா ழன் காலை 10 மணியளவில் சென்னை பாலன் இல்லத்தில் நடை பெறுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார் பில் நடைபெறும் இவ்விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் தோழ மைக் கட்சித் தலைவர்கள், சான் றோர் பெருமக்கள் பங்கேற்று சிறப் பிக்கின்றனர்.

இவ்விழாவில் அனைவரும் பங் கேற்று சிறப்பிக்குமாறு இந்தியக் கம்யூனி1ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

### புதுக்கோட்டை மாநகரத்தில் கழகம் வளர்த்த

# மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் மறைவு!

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, டிச.25-

புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னோடி - மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் மகனும், புதுக்கோட்டை மேயர் திலகவதியின் கணவரும், புதுக்கோட்டை மாநகரச் செயலாள ருமான ஆ.செந்தில் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது (56).

இதுகுறித்து கழகத்தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னோடி மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் புதல்வர் - மேயர் திலகவதியின் கணவர் மறைந்த ஆ.செந்தில் அவர்கள் சிறு வயது முதலே கழகத்தின் மீது தீராத பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர். முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், முன்னாள் மாவட்டப் பொருளாளராகவும் பதவி வகித்த அவர் கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர். மேலும் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகப் பணியாற்றியபோது கிராமம் கிராமமாகச் சென்று இளைஞர் அணி உருவாகப் பாடுபட்டவர்.

புதுக்கோட்டை நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து கழகத் தோழர்களிடமும், பொதுமக்களிடமும் இனிமையுடன் பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர்.

மேலும் புதுக்கோட்டையின் கடைசி நகரக் கழகச் செயலாளராகவும், முதல் மாநகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றிய பெருமை பெற்றவர்.

அவரது மறைவு புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினருக்கு பேரிழப்பாகும். கணவரை இழந்து துயருறும் மேயர் திலகவதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**மேயர் திலகவதிக்கு தொலைபேசியில் ஆறுதல்!**

மேலும் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த ஆ.செந்தில் அவர்களின் மனைவியும் புதுக்கோட்டை மேயருமான திலகவதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்தார்.